## மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை

# 3.28 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டம்!

## கோவையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**கோவை, ஆக. 11-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.8.2024) 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.8.2024) கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும் மற்றும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் ‘**தமிழ்ப் புதல்வன்**’ **திட்டத்தை** தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள்.

கல்வியறிவும் பொருளாதார சுதந்திரமும் பெண்களின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியம் என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கை மிகக்குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும், பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு / தொழிற்கல்வி ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி படிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கும் “புதுமைப் பெண்” திட்டத்தை 5.09.2022 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது 2024-2025ஆம் ஆண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், கலை, அறிவியல், பொறியியல், தொழிற் படிப்பு, மருத்துவ கல்லூரிகளில் பயிலும் மாணவிகள் உட்பட சுமார் 3.28 இலட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர். புதுமைப் பெண் திட்டத்தினால் மாணவிகள் உயர்கல்வியில் சேரும் எண்ணிக்கை 34 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

**2024 - 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் “தமிழ்ப் புதல்வன் திட்டம்” அறிவிப்பு**

தமிழ்நாட்டில் பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்வதற்கெனத் தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டமானது மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளதையடுத்து, 2024-2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டம்” பெண்களின் உயர் கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல், அரசுப் பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவர்களின் உயர் கல்வி சேர்க்கையை உயர்த்திடவும், ‘தமிழ்ப் புதல்வன்’ எனும் ஒரு மாபெரும் திட்டம் வரும் நிதியாண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்படும்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.8.2024) கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும் மற்றும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார். இவ்விழாவில், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள், பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். இத்தகைய முன்னோடித் திட்டங்களின் மூலம் நமது இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி அவர்கள் நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள். இப்புதிய திட்டத்தின் மூலம் சுமார் மூன்று இலட்சம் கல்லூரி மாணவர்கள் பயனடைவர் என்று அறிவிக்கப்பட்டது.

உயர்கல்வி, மாணவர்களின் கனவுகளை நனவாக்க உதவும் என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, புதுமைப் பெண்களுக்கு மட்டும் அல்லாமல் தமிழ்ப் புதல்வர்களாகிய மாணவர்களுக்கும் தாயுமானவனாக என்றும் உடனிருப்பேன் என்னும் விதமாக அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்ற அனைத்து மாணவர்களும் கலை மற்றும் அறிவியல், பண்பாடு, தொழில் நுட்பம், விவசாயம், செவிலியர், மருத்துவம் சார்ந்த படிப்புகள், சட்டம், பொறியியல், தொழிற்கல்வி சார்ந்த பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகளில் இந்திய அரசு, தமிழ்நாடு அரசு, பல்கலைக் கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் (ரூ.1,000/) ஊக்கத் தொகையை அவர்கள் முழுமையாக அப்படிப்பினை படிக்கும் பாட நெறி காலத்திற்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் உயர் கல்வி இலக்கினை அடையவும், எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளைப் பெற்றிடவும் இயலும்.

**“தமிழ்ப் புதல்வன் திட்டம்” செயல் படுத்தப்படும் முறை**

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக அளவில் மாணவர்கள் சேர்ந்து பயன்பெறும் வகையிலும், மாணவர்களின் உயர்கல்வியை ஊக்கப்படுத்தும் வகையிலும், ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தினை செயல்படுத்திட மாணவியர்களுக்காக ஏற்கனவே தமிழ்நாடு அரசால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் “புதுமைப் பெண்” திட்டத்தின் அடிப்படையில் இன்று துவக்கி வைக்கப்படும் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தில் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கப்படும். தற்போதுவரை புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 3,28,280 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000/ உதவித் தொகை பெற்று பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று இந்திய அரசு / தமிழ்நாடு அரசு / பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

**இத்திட்டத்தில் சுமார் 3.28 இலட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் தமிழ்நாடு அரசால் 2024-2025ஆம் நிதி யாண்டிற்கு 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

இத்திட்டத்தில் சேர்ந்து மாணவர்கள் பயன்பெற்றிட இணைய தள வாயிலாக விண்ணப்பிக்க பிரத்தியேகமான தகவல் முகமை (Portal - https://umis.tn.gov.in) வடிவமைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் மாணவருக்கு தனிப்பட்ட எண் (Unique ID) உருவாக்கப்பட்டு, மாணவரால் பதிவு செய்யப்பட்ட அலைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். அந்த எண்ணைக் கொண்டு விண்ணப்பங்களின் நிலையினை அறிந்து கொள்ள இயலும்.

மாணவர்களின் ஆதார் எண், பள்ளிக் கல்வித் துறையின் கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு (EMIS) தரவுகள் மற்றும் உயர் கல்வி பயிலும் நிறுவனத்தில் பெற்ற சேர்க்கை மற்றும் பல்கலைக்கழக மேலாண்மை தகவல் அமைப்பு (UMIS) ஆகிய தரவுகளுடன் மாணவர்களின் விண்ணப்பம் ஒற்றைச் சாளர முறையில் சரி பார்க்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களுக்கும் சமூக நலத்துறையால் National Automated Clearing House வாயிலாக ரூ.1,000/ உதவித் தொகை மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படும். மாணவர்கள் விண்ணப்பம் பதிவு செய்யும் போதும், ஊக்கத் தொகை மாணவர்களின் வங்கி கணக்கிற்கு பரிமாற்றம் செய்த பின்னரும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

இத்திட்டத்தில் கலை மற்றும் அறிவியல், தொழிற்சார் படிப்புகள், இணை மருத்துவம் சார்ந்த படிப்புகள், பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு (முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும்) போன்ற உயர் கல்வி படிப்புகள் படிக்கும் மாணவர்கள் பயன்பெறலாம். மேலும், எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு முடித்து, தொழிற்பயிற்சி பயில்வோரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

அதேபோன்று பிற மாநிலங்களில் ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் IIT, NIT, IISER போன்ற தகைசால் கல்வி நிறுவனங்களில் பயிலும் அரசுப் பள்ளிகளில் பயின்ற மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் பயின்ற மாணவர்களும் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

மகத்தான திட்டமான “தமிழ்ப் புதல்வன் திட்டம்” முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்றையதினம் (9.8.2024) கோயம்புத்தூர், அரசு கலை கல்லூரியில் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் இந்நிகழ்ச்சி தொடரப்பட்டது.

இவ்விழாவில், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6.வது நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி. ப.சச்சிதானந்தம் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் ,வார்டு, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் பலர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார்

# கோவை மாநகர் மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு நன்றி!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!

*கோவை, ஆக.11-*

*தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், தளபதி அவர்கள் வழிகாட்டுதலில், இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு கோவை நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றிப்பெற்ற கணபதி ராஜ்குமார் எம்.பி., வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.*

*இதுகுறித்து மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:*

*வருகிற 13.08.2024, செவ்வாய்க்கிழமை, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் எம்பி., கீழ்க்காணும் இடங்களில் சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் பகுதி2, சிங்காநல்லூர் பகுதி3 ஆகிய பகுதிகளில் நன்றி தெரிவிக்கிறார்.*

*13.08.2024, செவ்வாய்க்கிழமை மாலை 4.00 முதல் 9.00 மணி வரை சிங்காநல்லூர் பகுதி2, சிங்காநல்லூர் பகுதி3 பகுதிகளுக்கு உட்பட்ட வார்டு எண்கள் 60,59,61,62,65,84*

*வார்டு எண்:60: மாலை 4.00 மணி.வார்டு எண்:59: மாலை 5.00 மணி.வார்டு எண் : 61 : மாலை 6.00 மணி.வார்டு எண்:62 : மாலை : 6.45 மணி.வார்டு எண் : 65 : மாலை : 7.30 மணி.வார்டு எண் : 84 : இரவு 8.30 மணி.*

*இந்த நன்றி அறிவிப்பு சுற்றுப்பயணத்தில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள்,மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அனைத்து நிர்வாகிகள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், திமுக, இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், செயல்வீரர்கள்,*



*தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்தார்.*


**கோயம்புத்தூர் மாநகராட்சி**
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். (e) 40/2024 நாள் : 07.08.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வடக்கு, தெற்கு மற்றும் மத்தியம் மண்டலங்களில் கழிவுநீர் உந்து மோட்டாரை இயக்குதல் மற்றும் வருடாந்திர பராமரித்தல் பணிகள் | 36 பணி | 05.09.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 06.09.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 641 001. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 406/செ.ம.தொ.அ/கோவை/2024/நாள்: 09.08.2024

**கோயம்புத்தூர் மாநகராட்சி**
பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். (e) 39/2024 நாள் : 07.08.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1,2,3,4,10,11,12,13,14, 15,18,19,20,21,25,26,28,29,30,31, 32,46,47,48,49,63,64,66,67,68,69, 76,77,78,79,80,81,83,84,85,86,87, 88,94,95,96,98, மற்றும் 99க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 51 பணி | 02.09.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 03.09.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம், பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 641 001. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 407/செ.ம.தொ.அ/கோவை/2024/நாள்: 09.08.2024


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மயிலை ஆ. சந்திரன்**

**ஆகஸ்ட் 11 (1996)**



**இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் பகுதி பிரதிநிதியாகவும் – தென்சென்னை மாவட்டத்தில், வட்டக் செயலாளர், மயிலை பகுதி கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**